செய்தி வெளியீடு எண்: 579 நாள் : 14.11.2014

# தமிழக விவசாயிகளுக்கு தட்டுப்பாடின்றி உர வினியோகம் செய்ய அரசு அறிவுரை

தமிழ்நாட்டில் சம்பா பருவ நெல் சாகுபடி முழு வீச்சில் நடைபெற்று வரும் நிலையில் விவசாயிகளுக்கு தேவையான உரங்கள் காலத்தே சரியான விலையில் போதுமான அளவு கிடைப்பதை உறுதி செய்யும் நோக்குடன் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் வழிகாட்டுதலின்படி மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களின் தலைமையில் வேளாண்மைத் துறை அலுவலர்கள் மற்றும் உர உற்பத்தி மற்றும் வினியோகம் செய்யும் மாநில பிரதிநிதிகளுடன் கூடிய ஆய்வுக் கூட்டம் வேளாண்மை இயக்குநரகத்தில் நடத்தப்பட்டது. இக்கூட்டத்தில் முனைவர் மு. ராஜேந்திரன், வேளாண்மை இயக்குநர், திரு. வி. சித்திரசேனன், தோட்டக்கலைத் துறை இயக்குநர், திரு. கிரன்குராலா, கூடுதல் வேளாண்மை இயக்குநர் (பணி மேலாண்மை) மற்றும் அனைத்து மாவட்ட வேளாண்மை உதவி இயக்குநர்கள் (தரக்கட்டுப்பாடு) ஆகியோர் கலந்து கொண்டனர்.

ஆய்வுக் கூட்டத்தில், மாவட்ட வாரியாக உரங்கள் தேவை, தற்போதைய இருப்பு மற்றும் விநியோகம் ஆகியவை விரிவாக மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அக்ரி. எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி அவர்களால் ஆய்வு செய்யப்பட்டது. தமிழ்நாட்டின் முக்கிய பருவமான சம்பா பருவத்தில் இரசாயன உரங்கள் அதிகமாக பயன்படுத்தப்படுவதால் விவசாயிகளின் தேவைக்கேற்றபடி உரிய பகுதிகளில் உரங்கள் விநியோகம் செய்வதை உறுதிசெய்ய வேண்டுமெனவும், இறக்குமதி செய்யப்படும் உரங்களின் தரத்தை வேளாண்மைத் துறையின் தரக்கட்டுப்பாடு பிரிவினரால் பரிசோதித்து தரம் உறுதி செய்த பின்னரே வினியோகம் செய்யப்படவேண்டுமெனவும் அறிவுறுத்தப்பட்டது. மேலும், உரக்கட்டுப்பாடு சட்டம் 1985–ல் வரையறுக்கப்பட்டுள்ளபடி உரங்கள் சரியான

விலையில் விவசாயிகளுக்கு சென்றடையவேண்டும் எனவும், உரப்பதுக்கல் நடவடிக்கைகளில் ஈடுபடுவோர் மீது கடுமையான நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் எனவும் அதற்காக மாவட்ட, மாநில அளவில் ஆய்வுக்குழுக்களை அமைத்து
உறுதி செய்ய வேண்டும் எனவும் அறிவுரை வழங்கப்பட்டது. யூரிவை கலப்புர உற்பத்தி மையங்களுக்கு விநியோகம் செய்யப்படக்கூடாது எனவும், விவசாயிகளின் உடனடி தேவைக்கு மட்டுமே பயன்படுத்தப்பட வேண்டும் எனவும் அறிவுரை வழங்கப்பட்டது.

விவசாயிகளின் உரத்தேவையினை பூர்த்தி செய்ய உள்ளூர் உற்பத்தி மற்றும் இறக்குமதி நிறுவனங்களிடமிருந்து உடனடியாக கிடைக்க தேவையான நடவடிக்கைகள் விரைந்து மேற்கொள்ளப்பட்டு வருவதால் விவசாயிகள் அச்சமடைய தேவையில்லை எனவும் தெரிவிக்கப்பட்டது. கடந்த மாதம் மத்திய அரசால் நிர்ணயிக்கப்பட்ட உர அளவைவிட குறைவாக வழங்கியுள்ள உர நிறுவனங்கள்/இறக்குமதியாளர்கள் கடந்த மாத நிலுவையினையும் சேர்த்து இம்மாதம் வழங்க
உர நிறுவனங்கள்/ இறக்குமதியாளர்களுக்கு அறிவுரை வழங்கப்பட்டது. தற்போதைய சூழ்நிலையில் நீடித்த நிலையான உணவு உற்பத்தியை தமிழ்நாட்டில் நிலைநாட்ட ஒருங்கிணைந்த உர நிர்வாகம் மற்றும் சமச்சீர் பயிர் சத்துக்கள் மேம்பாடு போன்ற தொழில்நுட்பங்களை தமிழ்நாட்டிலுள்ள விவசாயிகள் பின்பற்ற வேளாண்மைத்துறை அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்க வேண்டுமென அரசால் அறிவுறுத்தப்பட்டது.

**வெளியீடு:**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**